**செய்தி வெளியீடு எண் : 750** **நாள்: 11.05.2022**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் இன்று (11.05.2022) சென்னை நந்தனத்தில் உள்ள ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை வளாக கட்டடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வணிகவரித்துறைக்குக் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்ட 100 புதிய வாகனங்கள் மற்றும் பதிவுத்துறைக்குக் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்ட 50 புதிய வாகனங்களில் இன்று முதற்கட்டமாக வணிகவரித் துறையின் சுற்றும் படைகளுக்கு 18 புதிய வாகனங்களையும், பதிவுத்துறையின் தணிக்கை பிரிவுக்கு 25 புதிய வாகனங்களையும் வழங்கினார்.

மேலும் வணிகவரித்துறை சார்பாக புதிதாக மின்னணு இதழ் வெளியிட்டு, நுண்ணறிவுப் பிரிவில் 2 அலுவலர்களுக்கு சிம்கார்டுடன் கூடிய கைக்கணினிகள் (Tablet), பணியின்போது உயிரிழந்த அரசுப் பணியாளர்களின் வாரிசுகள் 8 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள், சிறப்பாக பணியாற்றிய 8 அலுவலர்களுக்கு வெகுமதி மற்றும் சான்றிதழ்கள், விபத்தில்லா சேவையாற்றிய 2 ஓட்டுநர்களுக்குத் தங்கப் பதக்கம் ஆகியவற்றை வழங்கினார்.

வணிகர் நல வாரியத்தில், மறைந்த உறுப்பினர் ஒருவரின் குடும்பத்திற்கு உதவித் தொகையாக ரூ.1 இலட்சத்திற்கான காசோலை வழங்கினார்.

அதே போல், பதிவுத்துறையின் சார்பாக 2 நபர்களுக்கு கிறித்துவத் திருமண சான்றின் உண்மை வடிப்பு, பணியின்போது உயிரிழந்த அரசுப் பணியாளர்களின் வாரிசுகள் 8 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள், சிறப்பாக பணியாற்றிய துணை பதிவுத்துறை தலைவர், மாவட்டப்பதிவாளர் மற்றும் பதிவுத்துறை பணியாளர்களுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் ஆகியவற்றை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் திரு.க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி. பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., பதிவுத்துறை தலைவர் திரு.ம.ப.சிவன் அருள், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in